# ஒருங்கிணைந்தப் பள்ளிக் கல்வி, சென்னை–600 006
# மாநிலத் திட்ட இயக்குநரின் செயல்முறைகள்

ந.க.எண்: 1680/A11/பமேகு/ஒபக/2023, நாள்.27/07/2023.

பொருள்: ஒருங்கிணைந்தப் பள்ளிக்கல்வி–பள்ளி மேலாண்மைக் குழு – அனைத்து வகை அரசுப் பள்ளிகளிலும் ஆகஸ்ட்-2023 மாத பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டம் நடத்துதல் - வழிகாட்டுதல்கள் வழங்குதல் – சார்பு.

பார்வை-1: பள்ளிக்கல்வி ஆணையர், தொடக்கக் கல்வி இயக்குநர் மற்றும் ஒருங்கிணைந்தப் பள்ளிக்கல்வி மாநிலத் திட்ட இயக்குநர் அவர்களின் இணைச் செயல்முறைகள் ந.க.எண். 2223 / C7 / பமேகு / ஒபக / 2022, நாள்: 21.07.2022

*****

பார்வையில் கண்டுள்ள செயல்முறைகளின்படி பள்ளி மேலாண்மைக் குழுவின் கூட்டமானது மாதந்தோறும் அனைத்து வகை அரசுப் பள்ளிகளிலும் நடைபெற்று வருகிறது. சூலை-2023 மாதம் பள்ளி மேலாண்மைக் குழு சிறப்புக் கூட்டமானது அனைத்து அரசு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் கடந்த 14.7.2023 அன்றும், உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 19.7.2023 அன்றும் சிறப்பாக நடத்திய பள்ளி மேலாண்மைக் குழுத் தலைவர், பள்ளித் தலைமையாசரியர், ஆசிரியர் பிரதிநிதி உள்ளிட்ட உறுப்பினர்கள் அனைவருக்கும் ஒருங்கிணைந்தப் பள்ளிக் கல்வித்துறையின் சார்பில் பாராட்டுக்கள்.

தொடர்ந்து, ஆகஸ்ட்-2023 மாதம் நடைபெறவுள்ள மாதாந்திரப் பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டத்தினை அனைத்து வகை **அரசுப் பள்ளிகளிலும் வரும் 04.08.2023 வெள்ளிக்கிழமை அன்று பிற்பகல் 03:00 மணி முதல் 04:30 மணி வரை** நடத்திட அறிவுறுத்தப்படுகிறது.

**அ) கூட்டத்தில் விவாதிக்க வேண்டியக் கூட்டப்பொருள் நிரல்கள்**

1. பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் கூட்டத்தில் பள்ளி வளர்ச்சி சார்ந்து விவாதிக்க விரும்பும் கூட்டப்பொருள் மீது கலந்துரையாடி தேவையின் அடிப்படையில் உரிய தீர்மானங்களை நிறைவேற்றுவதை தலைமையாசிரியர்கள் உறுதிசெய்ய வேண்டும்.
2. அரசு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் 14.7.2023 அன்று நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில், குறைந்தபட்சம் 25 முன்னாள் மாணவர்களை பள்ளியுடன் இணைந்து செயல்படும் வகையில், ஜூலை 20ஆம் தேதிக்குள் கண்டறிந்து tnschools.gov.in இணையதள பக்கத்தில்

பதிவு செய்ய அறிவுறுத்தப்பட்டிருந்தது. அதன் தற்போதைய நிலை மற்றும் விவரங்கள் மற்றும் தொடர் நடவடிக்கைகள் பற்றிக் கூட்டத்தில் பகிர்ந்துகொள்ள வேண்டும்.

3. அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 19.7.2023 அன்று நடைபெற்ற பள்ளி மேலாண்மைக் குழுவின் சிறப்புக் கூட்டத்தில் 10-ஆம் வகுப்பு மற்றும் 12-ஆம் வகுப்புப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெறாத, தேர்விற்கு வருகை புரியாத மற்றும் துணைத் தேர்விற்கு விண்ணப்பிக்காத சார்ந்த பள்ளியின் எத்தனை மாணவர்கள் மற்றும் அவர்தம் பெற்றோர்கள் பங்கேற்க அழைப்பு விடுக்கப்பட்டது. மேற்காண் கூட்டத்தில் பங்கேற்றுத் தமது விருப்பத்தைப் பதிவு செய்த எத்தனை மாணவர்கள் உயர்கல்வி (ITI & Polytechnic Colleges) கல்விநிலையங்களில் சேர்ந்து கல்வியை தொடர்கின்றனர் மற்றும் அதன் தொடர் முயற்சிகள் பற்றிய விவரத்தையும் கூட்டத்தில் தலைமையாசியர்கள் பகிர்ந்துகொள்ள வேண்டும்.

4. மாவட்ட அளவில் அனைத்து வகையிலும் சிறப்பாகச் செயல்படும் பள்ளி மேலாண்மைக் குழுவிற்கு 2023 ஆகஸ்ட் 15, சுதந்திர தினத்தன்று சார்ந்த மாவட்ட ஆட்சியர்களால் பாராட்டுச் சான்று வழங்கப்படவிருக்கிறது. இதன்பொருட்டு சிறந்த பள்ளி மேலாண்மைக் குழுவினை EMIS வழியாகத் தேர்வு செய்வதற்கான அடிப்படைகள் (Criteria) இணைப்பு-1இல் கொடுக்கப்பட்டுள்ளது. இதன் விவரத்தை அனைத்துப் பள்ளி தலைமையாசிரியர்களும் பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டத்தில் தவறாது பகிர்ந்துகொள்ள வேண்டும்.

**பிற வழிகாட்டுதல்கள்**

1) பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்ட அழைப்பினை, அஞ்சல் அட்டை மூலமாகவோ அல்லது கூட்ட அழைப்பாளர் (தலைமை ஆசிரியர்) கையொப்பமிட்ட அழைப்பினைப் பள்ளியில் படிக்கும் ப.மே.கு உறுப்பினர்களின் குழந்தைகள் வழியாக மாவட்டத் திட்ட இயக்குநரின் இச்செயல்முறைக் கடிதத்துடன் கொடுத்தனுப்பி வருகையை உறுதிசெய்ய வேண்டும்.

2) பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்ட நிகழ்வு அட்டவணை இணைப்பு-2இல் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த அட்டவணையை நிரந்தரமாகப் பள்ளி வளாகத்தில் பார்வைக்கு வைக்கப்படுவதையும் உறுதிசெய்ய வேண்டும். கூட்டத்தில் கட்டாயமாக விவாதிக்கப்பட வேண்டிய நிலையானக் கூட்டப்பொருள் நிரல் இணைப்பு-3இல் காணொலி வடிவில் கொடுக்கப்பட்டுள்ளது.

3) மாவட்டக் கள அலுவலர்கள், பள்ளி மேலாண்மைக் குழு முதன்மைக் கருத்தாளர்கள் மற்றும் பார்வையாளர்கள் எவ்வித முன்னறிவிப்புமின்றிப் பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ளவும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

மேற்காண் வழிகாட்டுதல்களைப் பின்பற்றிக் கூட்டப் பொருள் நிரல்களானது (Meeting Agendas) பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டத்தில் விவாதிக்கப்பட பள்ளித் தலைமை ஆசிரியர்கள் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டம் அனைத்து வகை அரசுப் பள்ளிகளிலும் உரிய நேரத்தில் வழிகாட்டுதல்களைப் பின்பற்றி நடைபெறுவதை அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் / மாவட்டத் திட்ட அலுவலர்கள், உதவித் திட்ட அலுவலர்கள் / பள்ளி மேலாண்மைக் குழு ஒருங்கிணைப்பாளர்கள் மூலம் உறுதி செய்யுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இணைப்பு:

(1) சிறந்த ப.மே.கு - அடிப்படைகள் (Criteria) மற்றும் மதிப்பீடு (Weightage)
(2) மாதாந்திரக் கூட்ட நிகழ்வு அட்டவணை
(3) நிலையானக் கூட்டப்பொருள் நிரல் – QR Code

27/7/23.

மாநிலத் திட்ட இயக்குநருக்காக

பெறுநர்:

27.7.2023

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் / மாவட்டத் திட்ட அலுவலர்கள்

இணைப்பு–1

**சிறந்த பள்ளி மேலாண்மைக் குழு விருது:** 2023 ஆகஸ்ட் 15ஆம் தேதி சுதந்திர தினத்தன்று மாவட்ட ஆட்சியர்களால் மாவட்ட அளவில் சிறப்பாகச் செயல்படும் சிறந்த பள்ளி மேலாண்மைக் குழுவிற்குப் பாராட்டுச்சான்று வழங்கப்படவிருக்கிறது.

**அடிப்படைகள் (Criteria) மற்றும் மதிப்பீடு (Weightage)**

மொத்த மதிப்பீட்டு அளவு – **100 மதிப்பெண்கள்**

1) **மாதாந்திரக் கூட்டம் – 10 மதிப்பெண்கள்**

அனைத்துக் கூட்டங்களும் நடத்தப்பட்டுள்ளது. (நடத்தப்பட்டக் கடைசிப் 10 கூட்டங்கள் மட்டுமே கணக்கில் எடுக்கப்படும்)

2) **உறுப்பினர் வருகை –** 10 மதிப்பெண்கள் x 5 கூட்டங்கள் **= 50 மதிப்பெண்கள்**

(கடைசி 5 கூட்டங்கள் மட்டும் கணக்கில் எடுக்கப்படும்)

ஒரு கூட்டத்திற்கு ஒருநபருக்கு – மதிப்பெண்கள்

a) தலைவர் – 0.5
b) துணைத் தலைவர் – 0.5
c) பெற்றோர் உறுப்பினர்கள்(12 x 0.5) = 6
d) தலைமையாசிரியர் – 0.5
e) ஆசிரியர் பிரதிநிதி – 0.5
f) உள்ளாட்சிப் பிரதிநிதிகள் (2 x 0.5) = 1
g) ITK தன்னார்வலர் – 0.5
h) சுயஉதவிக்குழு உறுப்பினர் – 0.5

3) **தீர்மானங்கள் – 40 மதிப்பெண்கள்**

A. பின்வரும் உட்கூறுகள் அடிப்படையில் இயற்றப்பட்டத் தீர்மானங்கள் – ஒவ்வொரு கூட்டத்திற்கும் கீழ்காண் நான்கு உட்கூறுகளும் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும்.

(2 மதிப்பெண்கள் x 10 கூட்டங்கள் = 20 மதிப்பெண்கள்)

a. சேர்க்கை மற்றும் தக்கவைத்தல் – 0.5
b. கட்டமைப்பு – 0.5
c. கற்றல் – 0.5
d. மேலாண்மை – 0.5

B. முடித்துவைக்கப்பட்ட தீர்மானங்கள் – ஒரு தீர்மானத்திற்கு 2 மதிப்பெண்கள் வீதம் x அதிகபட்சமாகப் 10 தீர்மானங்கள் = **20 மதிப்பெண்கள்**

**குறிப்பு:** இந்த ஆண்டு மட்டும் மேற்காண் தேவைகள் பள்ளி மேலாண்மைக் குழுவால் EMISஇல் உள்ளீடு செய்யப்பட்ட தரவுகள் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படும்.

## இணைப்பு-2

# பள்ளி மேலாண்மைக் குழு - மாதாந்திரக் கூட்ட நிகழ்வு அட்டவணை

| நேரம் மாலை | செயல்பாடு | நடைமுறை | கால அளவு |
|---|---|---|---|
| 3:00 -3:10 | பள்ளி வளாகத்தைப் பார்வையிடுதல் | கூட்டம் ஆரம்பிக்கும் முன்னர் குழு உறுப்பினர்கள் அனைவரும் பள்ளி வளாகம், வகுப்பறை, கழிவறை, குடிநீர் வசதிகள், சமையல் அறை, சமையல் பொருட்கள் வைப்பறை, நூலகம் மற்றும் விளையாட்டு மைதானம் ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களைப் பார்வையிடுதல் | 10 நிமிடங்கள் |
| 3:10 -3:15 | ஊக்கமூட்டும் காணொலிகள் திரையிடல் | செயல்பாடுகளை ஊக்கப்படுத்தும் விதம் பள்ளி மேலாண்மைக் குழுக் குறித்தக் கணொலிகளைத் திரையிடுதல் | 5 நிமிடங்கள் |
| 3:15 -3:20 | வருகைப் பதிவு | உறுப்பினர்களின் வருகையைக் கைப்பேசி செயலியில் தலைவரால் பதிவு செய்யப்படுதல் | 5 நிமிடங்கள் |
| 3:20 -3:25 | வரவேற்பு | கூட்ட அழைப்பாளரான தலைமை ஆசிரியர் உறுப்பினர்களை வரவேற்றுக் கூட்டத்தைத் தொடங்கி வைத்தல். | 5 நிமிடங்கள் |
| 3:25 -3:35 | இல்லம் தேடிக் கல்வி தன்னார்வலர்களின் பங்கேற்பு | பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டம் நடைபெறும் நாளன்று 3 இல்லம் தேடிக் கல்வித் தன்னார்வலர்களை சிறப்பு அழைப்பாளர்களாக அழைத்து அவர்கள் சார்ந்த மையத்திலுள்ள மாணவர்களின் எண்ணிக்கை, வருகைப் பதிவு, கற்றல் அடைவு மற்றும் அடுத்த இரண்டு மாதத்திற்கானச் செயல் திட்டம் குறித்துக் கலந்தாலோசித்தல். | 10 நிமிடங்கள் |
| 3:35 -3:55 | திட்டமிடுதலுக்கான கருப்பொருட்கள் | • கூட்டத்தின் நோக்கத்தை தலைமை ஆசிரியர் எடுத்துக் கூறுதல்.<br>• மாநிலத் திட்ட இயக்கநரின் செயல்முறைகளில் கொடுக்கப்பட்டுள்ள கூட்டப் பொருள் நிரல்களையும் ஆலோசித்துத் திட்டமிடுதலுக்கான கூட்டப் பொருள் நிரலை தயாரித்தல்.<br>• கலந்தாலோசித்து தயாரிக்கப்பட்ட கூட்டப் பொருள் நிரல்களை வாசித்தல்.<br>• வேறு முக்கியத் தவிர்க்க இயலாதக் கூட்டப் பொருள் நிரல்கள் ஏதேனும் இருப்பின் குழு உறுப்பினர்களிடம் கேட்டறிந்துச் சேர்த்துக் கொள்ளுதல்.<br>• முந்தையக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை ஒவ்வொன்றாக வாசித்து அதன் தற்போதைய நிலை, | 20 நிமிடங்கள் |

| நேரம் மாலை | செயல்பாடு | நடைமுறை | கால அளவு |
|---|---|---|---|
| | | முன்னேற்றம், சவால்கள் ஆகியவற்றை விவாதித்துத் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்வது குறித்துத் தீர்மானித்தல் | |
| 3:55 -4:25 | • கூட்டப் பொருள் நிரல் (meeting agenda) மீதான விவாதம்<br>• தீர்மானங்களைr; செயலி மற்றும் பதிவேட்டில் பதிவு செய்தல் மற்றும் கையொப்பம் பெறுதல் | • முன்பே தயாரிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட கூட்டப் பொருள் நிரல்கள் ஒவ்வொன்றாகக் குழுவில் கலந்தாலோசித்து, விவாதித்து உரிய தீர்மானங்களை மேற்கொள்ளுதல்.<br>• மேற்கொள்ளப்பட்டத் தீர்மானத்தைச் செயல்படுத்துவதற்குத் தேவையான நிதியளவு, நிதி ஆதாரம், பொறுப்பாளர்கள், தொடர்புடையத் துறைகளின் ஒத்துழைப்பு, செயலை முடிப்பதற்கான கால அளவு ஆகியவற்றை நன்கு திட்டமிட்டுத் தீர்மானங்களை நிறைவேற்றுதல்.<br>• ஒருமனதாக அனைத்து உறுப்பினர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டத் தீர்மானங்களைத் தீர்மானப் பதிவேட்டில் / செயலியில் பதிவு செய்து வருகை புரிந்த அனைத்து உறுப்பினர்களின் கையொப்பம் பெறுதல் | 30 நிமிடங்கள் |
| 4:25 -4:30 | கூட்டம் நிறைவு செய்தல் | பங்கேற்ற அனைத்து உறுப்பினர்களுக்கும் நன்றி கூறுதல் | 5 நிமிடங்கள் |

**இணைப்பு-3:**

Scan the QR Code: பள்ளி மேலாண்மைக் குழுவின் ஒவ்வொரு மாதாந்திரக் கூட்டத்திலும் கட்டாயமாக விவாதிக்கப்பட வேண்டிய நிலையானக் கூட்டப்பொருள் நிரல் (Standard Meeting Agenda) காணொலி வடிவில்.